**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)

அமர்வு வழக்கு எண். 4/2025

நாள்: 07.03.2026

அரசு தரப்பு சாட்சி: 4

சாட்சி விசாரணையை காணொளி மூலம் நடத்துவதற்கு அரசு தரப்பில் மனு தாக்கல் செய்து எதிரிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சாட்சி காணொளி மூலம் வரவழைக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரும் உள்ளார். சாட்சி செங்கல்பட்டில் உள்ள காணொளி அரங்கத்தில் அமர வைக்கப்பட்டு சாட்சி காணொளி மூலம் நீதிமன்றத்திலுள்ள திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சியின் அருகில் காணொளி மூலம் விசாரணை செய்வதற்கு உதவியாக திரு. Tmt.S.Devi, Assistant Programmer, முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு என்பவர் உள்ளார். சாட்சி கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம் Grade–I Bench Clerk **திருமதி. M.ஜானகி** என்பவர் மூலம் பிரமாணம் செய்யப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு சாட்சியின் அடையாளமும் உறுதிப்படுத்தப்பட்டபின் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. அசோகசக்கரவர்த்தி, சார்பு ஆய்வாளர், சட்டம் ஒழுங்கு காவல் நிலையம், சேலையூர், சோலையூர் ரேஞ்ச், பள்ளிகரணை, தாம்பரம் மாநகர் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 10–ன் படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 15:22:25 +0530

| | | |
|---|---|---|
| Name | : | திரு.G.அசோகசக்கரவர்த்தி |
| Father Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | சார்பு ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | |

**(எதிரிகள் ஆஜரில்லை, எதிரிகள் தரப்பில் BNSS–355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது தாம்பரம் மாநகர், சோலையூர் ரேஞ்ச், சேலையூர் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.03.2023 ம் தேதி 12.00 மணிக்கு நான், சிறப்பு சார்பு ஆய்வாளர் பத்ரோஸ், முநிகா சத்தியராஜ் ஆகியோர்களுடன் கடுக்காய்வலசை விலக்குரோடு அருகே சென்றபோது இரண்டு நபர்கள் வருபவர்போபவர்களை அருவாளை வைத்து மிரட்டிக்கொண்டிருப்பதாக கிடைத்த தகவலை பெற்று நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றோம். போலிஸ் பார்ட்டியான எங்களை பார்த்ததும் ஓட எத்தனித்தவர்களை மடக்கிப்பிடித்து விசாரிக்க அவர்கள் தங்களது பெயர்களை முறையே தேவதாசன் என்கிற தேவா, வயது 30 த/பெ.தெய்வேந்திரன், மரவெட்டிவலசை, உச்சிப்புளி என்றும், மற்றொரு நபர் தினேஷ் வயது 20, த/பெ.பாலசுந்தர், 2/63, வடக்குத்தெரு, ஆற்றங்கரை என்று கூறியவர்களை மேலும் விசாரிக்க அவர்கள் அரசால் தடைசெய்யப்பட்ட கொலைக்கருவியான சுமார் 2 ¼ அடி நீளமுள்ள 3 அங்குலம் சற்றே வளைந்த கூரிய முனையுடைய இரும்பு கைப்பிடியுடன் கூடிய இரும்பு வாளை பின்புறம் சொறுகி வைத்திருந்ததை எடுத்து என்னிடம் ஆஜர் செய்தனர். மேற்படி நபர்களை காரணம் கூறி கைதுசெய்து அவர்கள் உறவினர்களிடம் தகவல் தெரிவித்து காவல் கட்டுப்பாட்டு அறைக்கும் தகவல் தெரிவித்து நிலையம் வந்து பாராவசம் ஒப்படைத்தேன். பின்பு எதிரிகள் மீது குற்ற எண்.79/2023 சட்ட பிரிவுகள் 25(1A) Armts Act ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**. பின்னர் 1ம்

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.07 15:22:30 +0530

எதிரியான தேவா என்ற தேவதாசனிடம் சாட்சிகள் சிறப்பு சார்பு ஆய்வாளர் பத்ரோஸ், முநிகா முத்துராஜ் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 27 செமீ நீளமுள்ள இரும்பு கைப்பிடி பொருத்திய வீச்சருவாள் சாட்சிகள் பத்ரோஸ், முநிகா முத்துராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.4**. பின்பு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்பை ஆய்வாளர் விசாரணைக்கு வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>** இல்லை.

| | | |
|---|---|---|
| Tmt.S.Devi, Assistant Programmer,<br>Principal District Court,<br>Chengalpat.<br>Coordinator<br>Remote site | Deponent | Tmt.A.Janaki, Gr-I, Bench Clerk,<br>Additional District Court,<br>Ramanathapuram.<br>Coordinator Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 15:22:35 +0530